

# 1989 මාර්තු 09 වනද ජනාධිපතිතුමා විසින් පාර්ලිමේන්තුව අමතා කළ කථාව

# 1989 மாச்சு 09 ஆம் தேதி சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை

# ADDRESS TO PARLIAMENT BY THE PRESIDENT ON 09TH MARCH, 1989

BKT.0085
25.08.2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# 1989 මාර්තු 09 වැනි දින දෙවැනි පාර්ලිමේන්තුවේ පළමුවැනි සැසිවාරය විවෘත කිරීමේ උත්සවයේ දී ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ජනාධිපතිතුමා විසින් පාර්ලිමේන්තුව අමතා පවත්වන ලද කථාව

# 1989 மாச்சு மாதம் 09 ஆந் திகதியன்று இரண்டாம் பாராளுமன்றத்தின் முதலாம் அமர்வின் திறப்புவிழா வைபவத்தின்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை

# ADDRESS TO PARLIAMENT BY THE PRESIDENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA ON THE OCCASION OF THE CEREMONIAL OPENING OF THE FIRST SESSION OF THE SECOND PARLIAMENT ON 9TH MARCH, 1989

ගරු මන්ත්‍රීවරුනි,

ශ්‍රී ලංකා ජනතාව වෙනුවෙන් දෙවෙනි පාර්ලිමේන්තුවේ පළමුවෙනි සැසිවාරයට මම තමුන්නාන්සේලා සාදරයෙන් පිළිගන්නවා. අද පාර්ලිමේන්තුව රැස්වෙන්නේ 1989 පෙබරවාරි මස 15 වැනිදා පැවැත්වුණු මහා මැතිවරණයේ ප්‍රතිඵලය හැටියටයි.

නිශ්චිත වශයෙනුත්, සාර්ථක ලෙසිනුත්, අවිහිංසාවාදීව වෙඩි උණ්ඩය පරදවා සර්වජන ඡන්දය රජකරවූ අපේ ජනතාවට මගේ ප්‍රණාමය පුද කරනවා. ප්‍රජාතන්ත්‍රවාදයේ උත්තරීතර ප්‍රතිපත්තිවලට තමන් දක්වන ඒකාන්ත කැපවීම අපේ ජනතාව අභීතව ප්‍රදර්ශනය කළා. අපේ ජනතාව පැහැදිලි ලෙසත්, ප්‍රත්‍යක්ෂ ලෙසත් ස්වකීය තීන්දුව දී තිබෙනවා. අපේ ජනතාව ස්වකීය රාජ්‍ය නායකයාත්, ස්වකීය රජයත්, ස්වකීය ප්‍රතිපක්ෂ නියෝජිතයිනුත් තෝරාගෙන තිබෙනවා.

අපේ සමාජයේ පැතුම් සපුරා ගන්නට මැතිවරණ ක්‍රමය ආධාර වෙනවා. එවැනි පැතුම් සම්බන්ධයෙනුත්, අවශ්‍යතා සම්බන්ධයෙනුත් පරස්පර අදහස් උදහස් පවතිනවිට ඒවා සමථයකට පත්කර ගන්නත් මැතිවරණ ක්‍රමය ඉවහල් වෙනවා. ජාතික පරමාර්ථ මොනවාද, ප්‍රමුඛතා මොනවාද කියා නියමකර ගැනීමටත් එය රුකුලක් වෙනවා. ඒවාගේම, ජනතාවගේ නිගමනයන් තෝරා බේරා ගැනීම සඳහාත්, ප්‍රතිපත්තිත්, වැඩසටහනුත් ජනතාවට ඉදිරිපත් කිරීම සඳහාත් මෙවැනි මැතිවරණ අත්‍යවශ්‍යයි. ශ්‍රී ලංකා ජනතාව ස්වකීය ප්‍රඥ මහිමයෙන් ස්වකීය නියෝජිතයින් හැටියට තමුන්නාන්සේලා තෝරාගෙන තිබෙනවා.

ශ්‍රී ලංකාවේ ජනාධිපති වශයෙන් මා ප්‍රතිඥාදුන් දවසේ මහනුවර ශ්‍රී දළදා මන්දිරයේ අතිපාරිශුද්ධ භූමියේ සිට මම ජනතාව අමතා කථාකළ බව ගරු මන්ත්‍රීවරුන්ට මතක ඇති. එදා මම මූලික ක්‍රියාමාර්ග හතරකට ඇප කැප වුණා.

මම එදා කිවේ මෙයයි :

"මගේ ජනතාව සමගි කරවන්නත්, සුහද කරවන්නත්,
මම ඇප කැප වෙනවා ;

මගේ ජනතාව සන්සුන් කරවන්නත්, ඔවුන් නුවණින් ක්‍රියා කරවන්නත් මගේ ජනතාවට නායකත්වය දෙන්නත් මම ඇප කැප වෙනවා ;

සාමයත් සමාදානයත් කරා මගේ ජනතාව ගෙනයන්න මම ඇප කැප වෙනවා ;

සංවරශීලීවීමට මගේ ජනතාවට නායකත්වය දෙන්න මම ඇප කැප වෙනවා. "

මේ දර්ශනය අනුවයි මගේ රජයේ මූලික ප්‍රතිපත්ති සකස් කෙරෙන්නෙ. පාර්ලිමේන්තුවේ සැළකිල්ලට යොමු කෙරෙන යෝජිත අණපනත්වල හරය වශයෙන් ඇතුළත්වෙනු ඇත්තේ මේ දර්ශනය අනුව ගන්නා තීරණයි. තමතමන්ගේ ජාති, ආගම්, භාෂා, ජනවර්ග, දේශපාලන යනාදි සම්බන්ධකම් කුමක් වුවත් නමුත්නාත්සේලා හැම දෙනාගෙන්ම මම ඉල්ලා සිටින්නේ මෙසේ ඇප කැපවී ක්‍රියා කරන්නට මා සමග හවුල්වෙන ලෙසයි.

මේ නව දර්ශනය අනුගමනය කරන්න තීරණය කළේ 1988 දෙසැම්බර් 19 වැනිදා ජනාධිපතිවරණයේ දී මම එක්සත් ජාතික පක්ෂයේ මැතිවරණ ප්‍රකාශනය ජනතාව හමුවේ තැබූ අවස්ථාවේදීයි. මම ඉදිරිපත් කරන නව දර්ශනයත්, මම පොරොන්දුවෙන නව පිළිවෙතත් ජනතාවට ලබා නොදී ඉන්නට කිසිසේත් පුළුවන්කමක් නැහැ. අප විසින් දූත් කළයුතුව තිබෙන්නේ මේ පාර්ලිමේන්තුව පෝෂණය කරන ඉමහත් ජනසමූහයාගේ විශ්වාසය රැක ගැනීමයි. අප විසින් දූත් කළයුතුව තිබෙන්නේ සියළුම භේදකාරක බලවේග පහකරදමා, අපේ ජනතාව එකම ධජයක් යටතේ සමගිසම්පන්න කිරීමයි. අප විසින් දූත් කළයුතුව තිබෙන්නේ මොනයම් හේතුවක් නිසා හෝ දුරස්ථවී සිටින හැම දෙනාම ළංකර ගැනීමයි.

මම ජනාධිපති නනතුරේ රාජකාරි භාරගත්තේ 1989 ජනවාරි මස 02 වැනිද. ඒ මොහොතේ පටන්, විවිධ කොටස් අතර සටන් උණුසුම සංසිඳුවන්නත්, වාද භේද දුරලන්නත්, ජාතික සමගි සන්ධානයක් ගොඩනගන්නත් මගේ රජය අධිෂ්ඨානයෙන් ක්‍රියාකර තිබෙනවා. රටේ ප්‍රධාන සමාජ, ආර්ථික ප්‍රවාහයට එක්වන ලෙසට අද විරුද්ධවාදීව සටන්කරන කොටස්වලට මම ක්ෂිප්‍ර වතාවක්ම

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

ආරාධනාකර තිබෙනවා. අපි හදිසි අවස්ථාව ඉවත්කළා. අත්අඩංගුවට ගෙන රඳවාගෙන සිටිය පුද්ගලයින් විශාල සංඛ්‍යාවක් මුදාහැරියා. මේ පියවර දෙකින්ම අපි බලාපොරොත්තු වුණේ අන්‍යොන්‍ය විශ්වාසයක්, අවබෝධයක් ඇති කරගත හැකි වාතාවරණයක් ඇති කිරීමයි.

අවවාද අනුශාසනා දෙනවාට වඩා තමන්ගේ හැසිරීමෙන්ම ආදර්ශයක් ලැබෙන්නට සැළැස්වීමේ ප්‍රතිපත්තිය වඩාත් උතුම් බව මම තදින්ම විශ්වාස කරනවා. සංවරය ආරම්භ වෙන්න ඕන ඒ ඒ පුද්ගලයාගේ ආත්ම සංවරයෙන්. මේ බලාපොරොත්තුව ඇති ව පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුනුත්, රජයේ උසස් තනතුරු දරන පුද්ගලයිනුත් විසින් පිළිපැදියයුතු ආචාරධර්ම පද්ධතියක් ප්‍රකාශයට පත්කරන්න පියවර ගෙන තිබෙනවා.

දේශපාලන, ආර්ථික, සමාජ, පරිපාලන කියන මේ අංශවල ප්‍රතිසංවිධානයක් ඇතිකිරීමේ ක්‍රියාදාමය මම දැනටම ආරම්භකර තිබෙනවා. විෂයයන්, කාර්යයන් වෙන්කරවීම හේතුයුක්ති සහිත පදනමකට ගෙනඒමෙන් මම මේ ක්‍රියාවලිය අරඹා තිබෙනවා. ජ්‍යෙෂ්ඨ විධායක මට්ටමට වැටෙන සියළුම නිලධාරීන්ගේ වැඩ කටයුතුවල සාර්ථකභාවය සමාලෝචනය කිරීමට භාවිතා කළයුතු මිනුම්දඬු හඳුන්වාදී තිබෙනවා. නාස්තියත්, දූෂණයත් තුරන්කිරීමට අපි පියවර ගණනාවක්ම අරගෙන තිබෙනවා. අපේ අධ්‍යාපන ක්‍රමය තුළත්, පරිපාලන ක්‍රමය තුළත් මතභේදයට තුඩුදී තිබුණු යම් යම් කරුණු මම ඒ ක්ෂේත්‍රවලින් ඉවත්කර දමා තිබෙනවා.

සෑම පුරවැසියෙකුටම යුක්තියත් සාධාරණයත් ඉටුවීම සහතික කිරීමට පියවර ගෙන තිබෙනවා. නීතියේ ආධිපත්‍යයට හානිකරනු දැකීමට මම කිසිසේත් කැමති නැහැ. කිසිදු මූලික මිනිස් අයිතිවාසිකමක් උල්ලංඝනය කරනු දැකීමට අප කිසිසේත් කැමති නැහැ. අපේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව ආරක්ෂාකරන්න ඕනැ. පුරවැසියාගේ මූලික අයිතිවාසිකම්, මූලික නිදහස ආරක්ෂා කරන්න ඕනැ. මගේ පාලනයේ ස්වභාවයත්, තේමාවත් වන්නේ මේවායි. මෙම පිළිවෙත දේශපාලන, සමාජ ස්ථාවරත්වය ගොඩනගාගෙන ආර්ථික සෞභාග්‍යය ඇතිකරගන්න මගේ රජයට උපකාරවනු නිසැකයි.

පොදුජන සුභසිද්ධිය සඳහා මගේ රජයේ වැඩසටහන් සියල්ලක්ම පදනම් කරනු ඇත්තේ එක්තරා මූල්ගල් තුනක් මතයි. ඒවා නම් :

පළමුව, සාකච්ඡා මගින්, කාගේත් අදහස් උදහස් විමසීම මගින්, පොදු සම්මුතියට එළඹීම මගින් ද තරහ මරහ නැතිකරදමා නැවත සුහදවීම මගින් ද සාමය ඇති කිරීම ;

දෙවනුව, නීතියේ ආධිපත්‍යය තරයේම ක්‍රියාත්මක කර විනය ආරක්ෂා කරවීම, සදාචාර ගුණධර්ම නැවත ඇති කරවීම මගින් පොදුජන සේවයේ යෙදී සිටින අය වෙනුවෙන් ආචාරධර්ම පද්ධතියක් ක්‍රියාවට නැගීම ;

තුන්වනුව, දේශපාලන, ආර්ථික, සමාජ, පරිපාලන පද්ධතිය ප්‍රතිසංවිධාන කිරීමෙන් දිළිඳුබව තුරන් කිරීම.

ශ්‍රී ලංකාවේ ප්‍රගතිය පිළිබඳ අපේ දර්ශනය අනුව අපට නොඅඩුවම තිබෙන සුවිශාල සම්පත තමයි, අපේ ජනතාව. මේ අනුව මගේ නායකත්වයෙන් පවත්නා මේ ආණ්ඩුවේ ප්‍රධානතම ප්‍රතිපත්තිය වන්නේ ජනතාව උදෙසා ආයෝජනය කිරීමයි. ජනතාවගේ අභිමානයත්, ආත්ම ගෞරවයත් වැඩිවර්ධනය කරන්නට ආණ්ඩුවේ මෙන්ම ප්‍රතිපක්ෂයේත් අපි සියලුදෙනාම අත්වැල් බැඳගන්න ඕනෑ. පුද්ගලයාගේ අදීනත්වය, අනන්‍යතාව ශක්තිමත් කරන්න, ඒට ගරුකරන්න අපි සියලුදෙනාම එක්වෙමු. මේ ආකාරයෙන් එක්කෝටි හැටලක්ෂයක් වන අප ජනතාවගේ ශක්තිය නව පිළිවෙතක් මගින් මල්ඵල ගන්වමු. ජනතාව හුදෙක් ආණ්ඩුවේ ප්‍රතිපත්තිවලත් වැඩසටහන්වලත් අකර්මන්‍ය ඉලක්කය හැටියට සලකන්න බැහැ. ඔවුන් හුදෙක් ක්‍රියාකිරීම්වලට භාජනය වන්නන්වත්, නිකම්ම ක්‍රියාකරන්නන්වත් නොවේ. ජනතාවගේ ඵලදායී සහභාගිත්වය නැතිව ශ්‍රී ලංකාවේ සංවර්ධනය සඳහා සැලැස්මක් හෝ උපාය මාර්ගයක් හෝ කෙසේවත් ක්‍රියාත්මක කරන්න බැහැ.

අප සෞභාග්‍යය කරා ලංකරවන මාර්ග තුනෙන් එකක් තමයි, සාමය. අපේ රට වගේ දේශපාලන හැඟීමත්, දැනීමත් ඉහළ මට්ටමක තිබෙන, ඒවාගේම දේශපාලන ක්‍රියාදාමයට

මෙහෙයවා සිටින ජනකායක් ඇති රටක, කවරෙකුගේ හෝ නියමය නිසා ඇති කරන සාමය වැඩි කලක් පවත්වන්න පුළුවන් වෙන්නේ නැහැ. එසේම උඩින්එන නියමයක් අනුව පවත්වන සාමයත් වැඩිකල් පවතින සාමයක් වෙන්නෙත් නැහැ. අපි ජනතා සමගිය ඇති කිරීමේත්, රටේ සමාජ – ආර්ථික ප්‍රතිසංස්කරණය ඇති කිරීමෙත් මහා කර්තව්‍යයට කැපවී ක්‍රියාකළොත් පමණයි, සාමය ඇති වෙන්නේ.

සාමය ගොඩනගන්න පුළුවන් වෙන්නේ කාගේත් අදහස් උදහස් විමසා, කාගෙත් අදහස් උදහස්වලට ගරුකර, එකඟත්වයට පත්වන ක්‍රියා මාර්ගයකින් පමණයි. සාමය තහවුරු වන්නේ ආර්ථික ප්‍රගතිය ඔරොත්තු දී පවතින පදනමකට පැමිණියහොත් පමණයි. සාමය දිනාගන්න අපි හැමවිටම ගෙන තිබෙන්නේ අවිහිංසාවාදී මගයි ; අනුන්ගේ සිතුම් පැතුම් ගරුකරන සහනශීලී මගයි. වෛරය වෛරයෙන් නොසන්සිඳෙන බවත් වෛරය සංසිඳෙන්නේ මෛත්‍රියෙන් බවත් තුන්ලෝකාග්‍රවූ සම්බුදුරජාණන්වහන්සේ දේශනාකර තිබෙනවා. එමනිසා සාමකාමී මාර්ගයෙන් පමණක් සාමය ලබාගැනීමට අපි ක්‍රියා කරමු. එහෙම නමුත් සාමය කඩකරන අය දැනගතයුතු කරුණක් තිබෙනවා. එය තමයි සාධාරණ පොදු ජනතාවට අසාධාරණය ඉවසීමේ සීමාවකුත් ඇති බව.

ප්‍රගතියත්, සෞභාග්‍යයත් කරා අප ගෙනයන තවත් මගක් තමයි, සංවරය. ජනතාව විශ්වාසය තබා තිබෙන අය, වගකීම් දරන අය අසංවරයෙන් ක්‍රියා කළොත් පොදු ජනතාව තුළ සංවරයෙන් යුක්තව ක්‍රියා කරන්න ඇති හැඟීම නැතිව යනවා ; සංවරවීමට තිබෙන යුක්තිය නැතිව යනවා. සංවරය ඇතිකර ගන්නට කිසියම් ප්‍රතිපත්ති මාලාවක් අනුව ක්‍රියා කිරීම අවශ්‍යයි. අවවාද අනුශාසනා කරනවාට වඩා තමන්ගේ චරිතයෙන් ආදර්ශයක් දැක්වීම අවශ්‍යයි. සැම පුද්ගලයෙක්ම නීතියට ගරුකිරීම අවශ්‍යයි. පොදු වශයෙන් ඇතිවන සංවරය නීතියට, සාමකාමී බවට පූර්ණ වශයෙන්ම පක්ෂපාතීවීම දක්වා වැඩීම අවශ්‍යයි. සංවරය සම්බන්ධයෙන් පාර්ලිමේන්තුව හුදෙක් ආදර්ශයක්දීම පමණක් මදි. අනුගමනය කළයුතු සම්මතයන් මට්ටම් ගොඩනැඟීමත් අවශ්‍යයි. පාර්ලිමේන්තුව කියන්නේ මහජනතාවගේ

අතිපාරිශුද්ධවූත් ශ්‍රේෂ්ඨවූත් වේදිකාවයි. එමනිසා පාර්ලිමේන්තුව ඉතාම විශිෂ්ට අන්දමිනුත්, මනා සංයමයෙන් යුතුවත් සිය වැඩකටයුතු කරගෙන යාම අවශ්‍යයි. මේ ව්‍යවස්ථාදයකය පාර්ලිමේන්තු කටයුතු සම්බන්ධ උසස්ම සම්ප්‍රදයන්, ව්‍යවහාරයන් අනුගමනය කරමින් ක්‍රියා කරාවිය යුතු මගේ දැඩි විශ්වාසයයි.

දිළිඳුකම තුරන්කිරීම තමයි, අපේ තුන්වන අරමුණ. අප සමාජයේ යම් යම් කොටස් අන්ත දිළිඳු බවට, අසරණ බවට පත්වී සිටින බව අපි පිළිගන්න ඕනැ. අපේ ජනගහනයෙන් අඩක්ම දිළිඳු ජනයාගේ ගණයටයි අයත් වෙන්නේ. ඔවුන්ගෙන් බොහෝ දෙනෙක් යම්තම් ජීවිතය ගැටගසා ගෙන ජීවත්වෙනවා. වෙන කවර කලකවත් නොවූවිරූ තරම් විශාල වශයෙන් පසුගිය දස අවුරුද්ද තුළ මෙරට ඇතිවුණු සංවර්ධනයේ ප්‍රතිඵල අපේ අන්ත දිළිඳු ජනයාටත් ලැබෙන්ට සළස්වන්න ඕනැ. දැන් මැතිවරණ කලබලය අවසානයි. මේ ගරු සභාවේ සැම මන්ත්‍රීවරයෙකුම පක්ෂ භේද, දේශපාලන මතිමතාන්තර පදනම් කරගත්ත භේද සියල්ලක්ම අමතක කර, දිළිඳුකම තුරන්කිරීමේ අරමුණ දිනාගැනීමට ක්‍රියා කරනු ඒකාන්තයි. දිළිඳුකම තුරන්කිරීමේ වැඩසටහනේ සැම කොටසක්ම ක්‍රියාත්මක කිරීම වහාම ඇරඹෙනවා ඇති. මේ වැඩසටහන කඩාකප්පල් කිරීමක් හෝ ප්‍රමාද කිරීමක් හෝ සිදුවන්නට ඉඩ නොතබා අපි හැකි සැම මහන්සියක්ම දරන බව ප්‍රකාශ කරන්න සතුටුයි.

අපේ මේ නව දර්ශනයත් නව පිළිවෙතත් එක්සත් ජාතික පක්ෂ ප්‍රතිපත්ති ප්‍රකාශනයේ ඇතුළත් වෙනවා. මේ ප්‍රතිපත්ති ප්‍රකාශනය මූළුමනින්ම හැන්සාඩ් වාර්තාවට ඇතුළත් කිරීම පිණිස මම සභාගත කරනවා. මේ ප්‍රකාශනයේ ඇතුළත් වෙන්නේ මගේ ආණ්ඩුව එහි නිල කාලය තුළදී අනුගමනය කරන ප්‍රතිපත්ති මෙන්ම ක්‍රියාත්මක කරන වැඩසටහන්. මගේ ආණ්ඩුවේ මේ බලාපොරොත්තු ක්‍රියාකාරී වැඩසටහන් බවට පරිවර්තනය කිරීමට අවශ්‍ය නීතිරීති අපි සම්මත කරනවා. නව නොබෝ දිනකින් ඉදිරිපත් කරන අයවැය ලේඛනයෙන් මේ වැඩසටහන් ක්‍රියාත්මක කිරීමට අවශ්‍ය විධිවිධාන සළසනවා ඇති. මම මේ කාර්යයන් නුමුන්නාන්සේලාගේ සැළකිල්ලට භාජනය කරන ලෙස ඉල්ලා සිටිනවා. තමුන්නාන්සේලා ඒවා

සාකච්ඡාවටත් විවාදයටත් ලක් කිරීම ඉතාම වැදගත්. තමුන්නාන්සේලාගේ ඥණවන්ත අදහස්, බුද්ධිමත් විවේචන ආදිය අපේ උපාය මාර්ග තවතවත් සංවර්ධනය කරගන්නත්, වඩාත් කාර්යක්ෂම කරගන්නත් බොහෝ සෙයින් උපකාර වනවා ඇති. තමුන්නාන්සේලා මේ වැඩකටයුතු කිරීමට ඵලදායී අන්දමට සහයෝගයදී ක්‍රියාකරන විට මෙතෙක්කල් ආණ්ඩුවත් ප්‍රතිපක්ෂයත් අතර පැවතුන අනවශ්‍ය භේදය අනුක්‍රමයෙන් අඩුවී යනවා ඇති. ජනතාවට බලපාන ප්‍රශ්න නිරාකරණය කරන්නට අපි නව සංකල්පවලට, නව උපාය මාර්ගවලට පිවිසීම ජනතාව බලාපොරොත්තු වෙන දෙයක්. ආණ්ඩුව, ප්‍රතිපක්ෂය කියන දෙපැත්තෙන්ම මේ අන්දමින් ක්‍රියාකිරීම ජනතාව අපේක්ෂා කරනවා. අපි මේ ජනතා අපේක්ෂාව ඉටුවන අන්දමට ක්‍රියාකරමු.

සියළු දෙනාටම තෙරුවන් සරණයි !

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே,

இலங்கைப் பெருமக்களின் சார்பில் இரண்டாம் பாராளு மன்றத்தில் முதலாம் அமர்விற்கு வருகை தந்த உங்கள் அனைவரையும் நான் அன்போடு வரவேற்கின்றேன். 1989 பெப்புரவரி மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலை அடுத்துத்தான் இன்று பாராளுமன்றம் கூடுகிறது.

உறுதியாகவும், வெற்றிகரமாகவும் அகிம்சை வழிநின்றும் வெடிகுண்டினைத் தோற்கடித்து சருவசன வாக்குரிமையை அரியாசனத்தில் அமரச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு என் அன்பு வணக்கங்களை உரித்தாக்குகின்றேன். மேலுயர் சனநாயக ஆட்சிக் கொள்கைகளின்மீது தாம் கொண்டுள்ள தீவிர பற்றினை அஞ்சா நெஞ்சங் கொண்ட நம்மக்கள் வெளிக்காட்டி உள்ளனர். நமது மக்கள் தெட்டத் தெளிவாக வும் நேருக்கு நேராகவும் தீர்ப்பினை வழங்கியுள்ளனர். நம் வாக்காளப் பெருமக்கள் தமது நாட்டுத் தலைவரையும் தமது அரசாங்கத்தையும் தம் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் களையும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

நம் சமூகத்தின் வேணவாக்களை நிறைவேற்றிக் கொள்ளத் தேர்தல்முறை உறுதுணை புரிகின்றது. அந்த வேணவாக்களும் தேவைகளும் முரணும் போதெல்லாம் சமரச இணக்கத்துக்கு வரவும் தேர்தல் முறை உதவி புரிகிறது. தேசியக் குறிக்கோள்கள் யாவையெனவும், முதன்மைகள் யாவையெனவும் பிரித்தறிதற்கும் அம்முறை துணை புரிகிறது. அதுமட்டுமன்றி, பொதுமக்கள் வழங்கும் தீர்ப்புகள் யாவை யெனக் கண்டறிதற்கும், கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை மக்கள் முன்னிலையில் வைப்பதற்கும் இத்தகைய தேர்தல்கள் அவசியமாகின்றன. இலங்கை மக்கள் தங்கள் அறிவுக்கூர்மையைப் பயன்படுத்தி தமது பாராளு மன்ற உறுப்பினர்களாக உங்களைத் தெரிவு செய்துள்ளனர்.

இலங்கையின் சனாதிபதியாக நான் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நாளில் அதி புனிதத்துவம் வாய்ந்த கண்டி சிறி தலதா மாளிகையில் வைத்து நாட்டுப் பெருமக்களுக்கு ஆற்றிய உரையினை மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு நினைவு கூர விரும்புகின்றேன். அன்று நான் அடிப்படையான நான்கு செயல்திட்டங்களுக்கு என்னை அர்ப்பணித்துக் கொண்டு விட்டேன்.

அவற்றை மீண்டும் எடுத்தியம்புகின்றேன் :

> "எனது மக்களிடையில் ஒற்றுமையினையும் நல்லெண்ணத்தினையும் ஏற்படுத்த நான் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்.
>
> எனது மக்களுக்கு மனச் சாந்தியினையும் மனத் தெளிவினையும் கொணர நான் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்.
>
> எனது மக்களை சமாதானத்துக்கும் இன வொற்றுமைக்கும் அழைத்துச் செல்ல நான் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்.
>
> எனது மக்களிடையில் ஒழுங்கினையும் கட்டுப் பாட்டினையும் நிலைநாட்ட நான் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்."

இச்சீரிய சிந்தனையின் அடிப்படையில் தான் எனது அரசாங்கத்தின் கொள்கைகள் அமையப் போகின்றன. இச் சீரிய சிந்தனையின் அடிப்படையில் தான் இப்பாராளு மன்றத்தில் விவாதிக்கப்படும் உத்தேச சட்டவாக்க மூலங்கள் அமையப் போகின்றன. உங்களுடைய இனம், மதம், மொழி, வகுப்பு, அரசியல் ஆகிய உறவுகளை மறந்துவிட்டு இம் மகத்தான பணிக்காக உங்களை அர்ப்பணித்துக் கொண்டு என்னுடன் உழைக்க வாரீர் என உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

1988 திசெம்பர் 19 ஆந் திகதி சனாதிபதித் தேர்தலின் போது நான் ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் முன் வைத்தபோது தான் இப்புதிய சிந்தனையைப் பின்பற்ற முடிவு எடுக்கப்பட்டது. நான் முன்வைக்கின்ற புதிய சிந்தனையும், நான் வாக்குறுதியளிக்கின்ற புதிய செயல் திட்டமும் நமது மக்களுக்கு வழங்கப்பட்டேயாக வேண்டும். இன்று நாம் எதிர்நோக்கியுள்ள முக்கிய பணி, இந்தப் பாராளுமன்றத்தை உருவாக்க உதவிய பல்லயிரக்கணக்கான பொதுமக்களின் நம்பிக்கையினை வென்றெடுப்பதே ஆகும். இன்று நாம் எதிர்நோக்கியுள்ள முக்கிய பணி, பிரிவினையைத் தூண்டும் சக்திகளைத் தோற்கடித்து நம்நாட்டு மக்களை ஒரு குடையின்கீழ் கொண்டுவருதலே ஆகும். இன்று நாம் எதிர்நோக்கியுள்ள முக்கிய பணி, பல சூழ்நிலைகளின் காரணமாக உறவற்றுப் பிரிந்துபோன யாவரோடும் மீண்டும் அன்பான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதே ஆகும்.

1989 சனவரி மாதம் 02 ந் திகதி நான் சனதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டேன். அன்றுதொட்டு போரிடும் பலரிடையில் நிலவிய இழுபறிகளைப் போக்கவும், கருத்து வேறுபாடுகளை நீக்கவும், தேசிய சமாதானத்தை ஏற்படுத்தவும் எனது அரசாங்கம் மனவுறுதியோடு பணிபுரிந்து வருகின்றது. நாட்டுக்கு உறுதிபயக்கும் பொருளாதார அரசியல் நடைமுறைக்கு வருமாறு மாறுபட்ட கருத்துடையவர்களுக்கு நான் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளேன். அவசரகால சட்டத்தை வாபஸ் பெறுவதன் மூலம், தடுப்புக் காவலில் இருந்த ஆயிரக் கணக்கானோர்களை விடுதலை செய்வதன் மூலம் பரஸ்பர நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

அறிவுரைகளை வழங்குவதிலும் பார்க்க முன்மாதிரியாக நடந்து கொள்வதே சிறந்தது என்ற கோட்பாட்டில் அசையாத நம்பிக்கை எனக்குண்டு. நாட்டில் ஒழுக்கமும் அடக்கமும் தனிநபர்களது நல்லொழுக்கத்தையும், புலனடக்கத்தையும் பொறுத்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், உயர் அரசாங்க பதவிகளை வகிப்போர்களுக்கும் ஏற்புடைய ஆசாரக் கோவையொன்றை வெளியிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார, சமூக, நிருவாகத் துறைகளை மீளமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விடயங்களையும், பணிகளையும் காரணகாரிய அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதன் வாயிலாக இந்த வழிமுறையைப் புகுத்தியுள்ளோம். சிரேட்ட நிறைவேற்றுத் தரங்களைச் சேர்ந்த எல்லா உத்தியோகத்தர்களினதும் செயல் நிறைவேற்றத்தினை அளவிடும் கோல்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. வீண்விரயத்தையும், ஊழல்களையும் அகற்றுவதற்கு நாம் நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துள்ளோம். நமது கல்வித் துறையிலும், நிருவாகத் துறையிலும் பிணக்குகளுக்குட்பட்டிருந்த சில விடயங்களை நான் நீக்கியுள்ளேன்.

குடிமக்கள் அனைவரும் நீதி, நியாயமுள்ளவர்களாய் உரிமையோடு வாழ உத்தரவாதம் அளிக்கும் சூழலை ஏற்படுத்தியுள்ளேன். சட்டவாட்சி மீறுவதை நான் விரும்ப மாட்டேன். அடிப்படை மனித உரிமைகள் மீறுவதையும் நான்

சகிக்க மாட்டேன். நமது அரசியலமைப்பு பாதுகாக்கப்படல் வேண்டும். குடிமக்களது அடிப்படை உரிமைகளும், பலவித சுதந்திரங்களும் பாதுகாக்கப்படல் வேண்டும். எனது நிருவாகத்தின் கருப்பொருளாகவும், உரிபொருளாகவும் இவை அமைகின்றன. இக்கொள்கையானது இந்நாட்டில் அரசியல், சமூக, உறுதிப்பாடு என்னும் அத்திவாரத்தில் வளமிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எனது அரசாங்கத்துக்கு உதவுவது திண்ணம்.

எனது அரசாங்கத்தின் மக்கள் நலனுக்கென வகுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் மூன்று அடிக்கல்களின்மீது நிறுவப்பட்டுள்ளன. அவையாவன :—

முதலாவதாக — பேச்சுவார்த்தைகளின் மூலமும், யாவரினதும் கருத்து அபிப்பிராயங்களை மதிப்பதன் மூலமும் பொதுவான இணக்கங்களுக்கு வருவதன் மூலமும், வெறுப்பு மனப்பான்மையைப் போக்கி மீண்டும் சமரச நிலைக்கு வருவதன் மூலமும் சமாதானத்தை ஏற்படுத்துதல் ;

இரண்டாவதாக — சட்டவாட்சியை வலியுறுத்தி சமுதாயத்தில் ஒழுங்கினைப் பேணுதல், பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டவர்களுக்கான ஆசாரக் கோவையொன்றை நடைமுறைக்குக் கொண்டுவருதல் ;

மூன்ருவதாக — அரசியல், பொருளாதார, சமூக, நிருவாகச் செயல்முறையினை முற்றுமுழுதாக மாற்றுவதன் மூலம் வறுமையினைப் பூண்டோடு ஒழித்தல்.

இலங்கையின் வருங்கால முன்னேற்றம் பற்றிய நமது சிந்தனையின்படி எங்களுக்குள்ள வற்ருத வளமூலம் மக்கள் வளமேயாகும். இதன் வண்ணம் எனது தலைமையிலுள்ள இந்த அரசின் தலையாய கொள்கை மக்கள் சார்பில் முதலீடு செய்வதாகும். பொதுமக்கள் மாட்சியினையும் தன்மானத்தையும் மேலோங்கச் செய்வதற்கு அரசாங்கத்திலுள்ளோர், எதிர்க்கட்சியிலுள்ளோர் ஆகிய நாம் அனைவரும் இணைந்து செயல் ஆற்றுவோம். தனிநபர்களது

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

சுதந்திரத்தினையும், தனித்துவதினையும் பேணிக் காப்பதற்கு எல்லோரும் ஒன்று சேருவோமாக. இந்த முறையிலே ஒரு கோடியே அறுபது இலட்சத்துப் பொதுமக்களின் சக்தியை இப் புதிய செயல்திட்டத்தின் வாயிலாகப் பூத்துமலரச் செய்வோம். அரசாங்கக் கொள்கைகளுக்கும், நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படும் உயிரற்ற சடப்பொருளாக மக்கள் அமையக் கூடாது. அவர்கள் வெறும் நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டவர்களாகவோ, அவற்றை நடித்துக் காட்டுபவர்களாகவோ இருப்பது சரியல்ல. பொதுமக்கள் பயன்கூர் முறையில் பங்குபற்றாத அபிவிருத்தித் திட்டவமைப்பொன்றை அல்லது திறமுறையொன்றை இலங்கையில் என்றுமே அமுல் செய்ய இயலாது.

சுபீட்சத்தை நோக்கிச் செல்லும் மூன்று வழிகளில் ஒன்றுதான் சமாதானம். நமது நாட்டைப் போன்ற முதிர்ந்த அரசியல் அறிவுள்ள ஒரு நாடுதன்னில் அதேபோன்று அரசியலில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள் வாழும் ஒரு நாட்டில் சமாதானத்தை பலவந்தமாகத் திணித்துவிட முடியாது. பலவந்தமாகத் திணிக்கப்பட்ட சமாதானம் எந்த நாட்டிலும் நிலை பெறுவது அரிது. தேசிய அடிப்படையில் உருவாகும் சமரசத்துக்காகவும், அரசியல் — பொருளாதார முறைகளை முழுதும் மாற்றி அமைப்பதற்காகவும் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமே உண்மையான சமாதானம் ஏற்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளை நடாத்துவதன் மூலமும், பிறருடைய அபிப்பிராயங்களை மதிப்பதன் மூலமும், சமரச இணக்கத்துக்கு வருவதன் மூலமும் தான் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். பொருளாதார முன்னேற்றம் பிறருடைய உதவியின்றி நீடுநிலைக்கும் போது தான் சமாதானமும் நீடுநிலைக்கும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாம் எப்போதும் அகிம்சை வழியினையும், மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை மதிக்கும் வழியினையும் அனுசரித்து வந்துள்ளோம். “ பகைமையைப் பகைமையால் போக்க முடியாது. அன்பினால் மட்டுமே பகைமையைப் போக்க முடியும் ” என்பது போதி மாதவனின் அருள்வாக்கு. எனவே அமைதியான வழிகளில் சமாதானத்தை ஏற்படுத்த நாம் முயன்று வருவோமாக. அதே நேரத்தில் அமைதியைக் குலைத்து வருபவர்கள் பொதுமக்களது பொறுமைக்கும் ஓர் வரையறை உண்டு என்பதை உணர வேண்டும்.

சமுதாயத்தில் ஒழுங்கினையும், கட்டுப்பாட்டினையும் ஏற்படுத்துவது முன்னேற்றத்திற்கும் சுபீட்சத்துக்கும் செல்லும் இன்னொரு வழியாகும். மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிப்பவர்கள் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டால் ஒழுங்கினையும், கட்டுப்பாட்டினையும் மக்கள் மதிக்கமாட்டார்கள். ஒழுங்கினைப் பேணுவதற்கு ஒழுக்க சீலங்கள் இன்றியமையாதன. அறிவுரை புகட்டுவதனைவிட முன்மாதிரியான நடத்தை அதற்கு இன்றியமையாதது. யாவரும் சட்டத்தை மதித்து நடந்து கொள்வது அவசியமாகும். நாட்டில் பொதுப்பட நிலவும் கட்டுப்பாடற்ற நிலைமாறி சட்டத்தை மனமார மதிக்கும் நிலை ஏற்படல் வேண்டும். ஒழுங்கினைப் பேணும் விடயத்தில் பாராளுமன்றம் முன்மாதிரியைக் காட்டுவது மட்டும் போதாது. அதற்குரிய கட்டளைகளையும் நியமிக்க வேண்டும். பாராளுமன்றம் எனப்படுவது பொதுமக்களுக்குச் சொந்தமானதும், மிகப் புனிதமானதும், மேலானதுமான மேடையாகும். ஆகவே பாராளுமன்றம் அரிய மாட்சியுடனும், சீரிய கட்டுப்பாட்டுடனும் இயங்குதல் வேண்டும். இந்தச் சட்டவாக்க மன்றம் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை சீருயர் மரபுகளையும், வழிமுறைகளையும் பின்பற்றி இயங்குமென்பது எனது நம்பிக்கை ஆகும்.

நமது மூன்ருவது குறிக்கோள் வறுமை ஒழிப்பாகும். நமது சமுதாயத்தில் வறுமையின் படுபாதாளத்தில், உதவிக்கு யாரும் இல்லாத நிலையில் துயருறுபவர்கள் இருக்கிருர்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது மக்கட் தொகையின் சரிபாதியினர் வறுமையுற்றவர்களாக இருக்கிருர்கள். அவர்களுள் பலர் மிகவும் கஷ்டப்பட்டு பிழைத்து வருபவர்கள். என்றுமே கண்டிராதவாறு கடந்த பத்து ஆண்டுகளில் இந்நாட்டில் ஏற்பட்ட மகத்தான அபிவிருத்தியின் நன்மைகளை மிகுந்த வறுமையில் உள்ள மக்கள் பெற்றுக்கொள்ள நாம் ஆவன செய்தல் வேண்டும். இப்பொழுது தேர்தல் சூடு தணிந்துள்ளது. இந்த மேலுயர் மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதங்களையும் அரசியல் கோட்பாட்டுப் பேதங்களையும் மறந்து வறுமை ஒழிப்புக் குறிக்கோளினை அடைவதற்கு ஆவன செய்ய முன்வருதல் வேண்டும். வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த அமுலாக்க நடவடிக்கைகள் யாவும் உடனே ஆரம்பிக்கப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டம் தாமதமேது

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

மின்றியும், தடையேதுமின்றியும் இனிது நடைமுறைப் படுத்த நாம் அயராது உழைத்து வருகின்றோம்.

இப்புதிய சிந்தனையும், இப்புதிய செயல் திட்டமும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் முழுவதனையும் குறைவின்றி ஹன்சார்ட் அறிக்கையில் வெளியிடுவதற்கு நான் அதனை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன். எனது பதவிக் காலத்தின்போது கடைப்பிடிக்கப்படும் கொள்கை களும் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் இத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்குகின்றன. எனது அரசாங்கம் இந்த எண்ணங்களைச் செயலுருப்படுத்துவதற்கு அவசியமான சட்டவாக்கங்களை நிறைவேற்றும். இந் நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைக்கான ஏற்பாடுகளைக் கொண்ட வரவு செலவுத் திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப் படும். இம்மகத்தான பணிகளை நான் உங்கள் அனைவரதும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் அவற்றை அலசி ஆராய்ந்து விவாதிப்பது மிகவும் முக்கியமானது. நீங்கள் வழங்கும் ஆர்வமிக்க கருத்துக்கள், பகுத்தறிவின்பாற்பட்ட விமரிசனங்கள் முதலியன நமது திறமுறைகளை மேலும் கூராக்குவதற்கும், கவின்பெறச் செய்வதற்கும் துணைபுரியும். நீங்கள் அனைவரும் இப் பணிகளை பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்ற எங்களுடன் ஒத்துழைப்பீர்களே யானால், இதுகாறும் அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் நிலவி வந்த தேவையற்ற பிணக்குகள் படிப் படியாக மறையும் என்பது திண்ணம். தேசிய பிரச்சினை களுக்கு புதிய அணுகு முறைகளையும் புதிய உளப்பாங்கு களையும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த அணுகு முறையை அரசாங்கக் கட்சியிடமிருந்து எதிர்பார்க்கின்றது போலவே எதிர்க் கட்சியிடமிருந்தும் பொதுமக்கள் எதிர் பார்க்கின்றனர். பொதுமக்களது இச்சீரிய வேணவாக்களை நிறைவேற்றும் வகையில் நாம் அனைவரும் செயல் புரிவோமாக.

உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

Hon. Members,

On behalf of the people of Sri Lanka, I welcome you to the First Session of the Second Parliament. Parliament is meeting today as a consequence of the General Election held on 15th February, 1989.

I salute the people who have convincingly, effectively and non-violently defeated the bullet and enthroned the ballot. Our people have courageously demonstrated their unfailing dedication to the highest principles of democracy. Our people have given their verdict in a clear and positive manner. They have chosen their Head of State, their Government and their representatives in the Opposition.

The electoral process helps in realizing the aspirations of our society. It reconciles conflicting perceptions of such aspirations and needs. It acts as a catalyst in defining national goals and priorities. It is also a medium through which policies and programmes are placed before the people for their judgment and choice. In their wisdom the people of Sri Lanka have selected you to be their representatives.

Hon. Members will recall that on the day of my inauguration as the President of Sri Lanka, I addressed the nation from the hallowed precincts of the Temple of the Sacred Tooth Relic in Kandy. On that day I dedicated myself to four fundamental courses of action.

I repeat:

"I dedicate myself to lead my people to unity and amity,

I dedicate myself to lead my people to calmness and sanity,

I dedicate myself to lead my people to peace and harmony,

I dedicate myself to lead my people to order and discipline."

It is from this vision that the fundamental policies of my Government will flow. It is from this vision that the spirit of the legislative proposals that are to be considered by this Parliament will flow. I call upon all of you, irrespective of race, religion, language, community or political affiliation to join me in this dedication.

The decision to pursue this new vision was taken when I placed the United National Party Manifesto before the people at the Presidential Election on the 19th of December, 1988. The new vision that I hold out and the new deal I promise are irrevocable commitments to our people. The task before us is to keep faith with the large mass of the people who made this Parliament possible. The task before us is to banish all divisive forces and unite our people under one banner. The task before us is to win back all those who have been alienated for one reason or the other.

I assumed the Office of President on the 2nd of January, 1989. Since then, my Government has relentlessly pursued a course of action to defuse tension, eliminate dissension and bring about national reconciliation. I have repeatedly invited the dissidents to enter the social and political mainstream of our country. The lifting of the Emergency and the releasing of a large number of persons under detention were intended to create a climate of mutual trust and understanding.

I firmly subscribe to the principle that example is better than precept. Discipline must begin with self-discipline. In this spirit action has been taken to introduce a code of ethics for Parliamentarians and those holding high public office.

I have set in motion the machinery for political, economic, social and administrative restructuring. I have begun this process with the rationalisation of the allocation of subjects and functions. I have introduced criteria for the review of performance of all the senior executive personnel. A series of steps have been taken to eliminate waste and corruption. I have removed some of the divisive and contentious issues from our educational and administrative systems.

I have guaranteed justice and fair-play to every citizen. I do not want the rule of law to be violated. I do not want any violation of the basic human rights. Our Constitution must be safeguarded. The fundamental rights and liberties of the citizen must be defended. This will be the tone and the theme of my administration. This will enable my government to ensure economic prosperity through political and social stability.

The three corner stones on which all the programmes of this Government meant for the common good will be mounted, are:–

Firstly,

Peace through consultation, compromise, consensus and reconciliation;

Secondly,

Discipline through the strict application of the rule of law, restoration of moral values and the enforcement of a Code of Ethics for the holders of public office;

Thirdly,

Poverty Alleviation through the restructuring of the political, economic, social and administrative machinery.

In my vision for the future of Sri Lanka, I see that our greatest resource which we have in abundance, is our people. Therefore, the fundamental principle of the Government that I am privileged to lead is to invest in our people. Let all the forces both in the Government and in the Opposition join together to enhance the dignity and the self respect of our people. Let all of us join together to strengthen and recognise the identity of the individual. In this manner let us marshal into effective fulfilment the energies of the 16 million people into a new deal. The people are not the objects of the policies and programmes of Government. Nor are they mere subjects and actors. There can be no design or strategy for the development of Sri Lanka without the effective participation of the people.

Peace is one of the three means which will lead us to prosperity. In a country as politically conscious and mobilised as ours, there can be no imposed peace. No imposed peace anywhere can be durable. Peace can come only if we commit ourselves to the great task of national reconciliation and socio-economic reconstruction. Peace can only come through consultation, compromise and consensus. Peace will be enduring only if economic progress is set on a self-sustained path. In our search for peace we have been pursuing a path of non-violence and tolerance. In

His great wisdom, Lord Buddha, taught us that 'Hatred does not cease by hatred but by love alone.' Therefore, let us try to achieve peace only through peaceful means. At the same time let those who disturb the peace understand that the patience of our people is not unlimited.

Discipline is another of the means to progress and prosperity. Indiscipline among those who occupy positions of trust and responsibility removes the motive and rationale for discipline in society at large. Discipline necessarily implies codes of conduct. It implies example more than precept. It requires respect for law and order on the part of every individual. General indiscipline must give way to absolute respect for law. In the matter of discipline, Parliament should not only set an example, it must also set the standards. Parliament represents the most sacred and the highest forum of the people. Therefore, Parliament should proceed with its business with great distinction and a high degree of decorum. I am confident that this legislature will uphold and maintain the highest traditions of Parliamentary practice in the conduct of its business.

Poverty Alleviation is our third objective. We must recognise the harsh reality of abject poverty and serious deprivation in our society. Around half our population live below the poverty line. A large number of them are on the margins of existence. The unprecedented growth and development of the past decade, should be channelled to reach the poorest of the poor. Now that the elections are over, let every member of this assembly, irrespective of Party or ideology work towards the realisation of the objective of poverty alleviation. All elements of the poverty alleviation programme will commence with immediate effect. No efforts will be spared in ensuring that this programme is carried through without disruption or delay.

The Manifesto of the United National Party contains this new vision and this new deal. I am tabling a copy of our Manifesto so that it will appear in the Hansard. It is a statement of the policies and programmes that my Government will follow during its term of office. Legislation will be introduced to translate the intentions of my Government into programmes of action. The

Budget that will be presented shortly will provide for the implementation of these programmes.

I commend these tasks to you. It is important that you discuss and debate them. Your insights, your suggestions and your criticisms will add constructively to the development and refinement of our strategies. And, as you contribute constructively to these tasks there will develop a less divisive relationship between the Government and the Opposition than has been the past pattern. The people expect a new attitude and a new approach to national concerns. They expect this from both sides—the Government and the Opposition. Let us live up to those expectations.

May the blessings of the Triple-Gem be upon you.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
25 AUG 2023
පුස්තකාලය